# வள்ளுவரும் சமூக மேம்பாடும்

**பேராசிரியர். கலாநிதி. செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
mssivasubramaniam@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறிகளை வகுத்துக்காட்டும் திருக்குறள், இலக்கியம் என்னும் நிலையில் மட்டும் நின்றுவிடாமல், மனித வாழ்வியல் கூறுகளைத் திருத்தும் கருவியாகவும் உள்ளது. இதனாலேயே குடும்பம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம் எனப் பல்வேறுபட்ட வாழ்வியல்சார் நல்லறங்களைப் போதித்து, பேண்தகு சமூகத்தை உருவாக்க முனைந்துள்ளது. இங்கு உலகத்தாருக்குப் பொதுவான இறைதத்துவக் கோட்பாடுகள் பேசப்பட்டுள்ளன. சமூகத்தை மாற்றும் கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. நீதியான பொருளாதார முறைமையும் பேசப்பட்டுள்ளது. அறமற்ற வழியில் பொருள் சேர்த்தல் தவறு என்று மக்களுக்கு உணர்த்தி, சரியான முறையில் பொருளீட்டும் முறைமையும் வலியுறுத்தப்பட்டுள்ளது. வள்ளுவம் பேசிய அரசியல்நெறிகள், அக்காலத் தேவை கருதிச் சொல்லப்பட்டாலும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாய், எந்நாட்டு அரசியல் அணுகுமுறைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. உலகில் சமூக மேம்பாட்டு வளர்ச்சிநிலைகளின் அவசியம் கருதிய வள்ளுவர், அவைசார்ந்த கருத்துக்களை முன்வைப்பது பேண்தகு சமூக அபிவிருத்தி நோக்கிய பார்வையிலேயே ஆகும். எனவே சமுதாயம் மேம்பாடு அடைவதற்கான வழிமுறைகளை வள்ளுவத்தின்வழி அடையாளப்படுத்தும் அடிப்படை விவாதத்தையே இவ்வாய்வு முன்வைக்கிறது. இவ்வாய்வில் வள்ளுவரின் திருக்குறள் பிரதி முதன்மைத்தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் பண்புசார் மற்றும் விபரணப் பகுப்பாய்வு முறைகள் பிரயோகிக்கப்பட்டு, சமூகவியல் மற்றும் அறவியல் கோட்பாட்டு அணுகுமுறைகளோடு விமர்சன நோக்குநிலையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்: திருக்குறள், அறம், சமூக மேம்பாடு.

## அறிமுகம்

விண்ணிலும் மண்ணிலும் பல நிகழ்வுகள் நடக்கின்றன. மனிதனின் உள்ளும் புறமும் சில நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பறவைகள், விலங்குகள், தாவரங்கள் என்ப வற்றிலும் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவற்றையெல்லாம் ஞானக் கண்களினால் உற்றுநோக்கி மனித சமூகத்தை மேல்நிலைக்கு உயர்த்தும் கருவியாகத் திருக்குறளை வள்ளுவர் யாத்துள்ளார். மனிதன் எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது என்ற அறக்கோட்பாட்டைத் திருக்குறளில் வலியுறுத்துகிறார். தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு என்றவாறு பரிணாம வளர்ச்சியடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்து கின்றார். தனிமனிதன் உயர்ந்தால் குடும்பம் மேன்மையடையும், குடும்பம் மேன்மை யடைந்தால் சமூகம் உயரும். சமூகம் உயர்ந்தால் நாடு வளர்ச்சியடையும், ஆன்மா

மாசுகளைக் களைந்து நேர் வழியில் பயணிக்கும்போது உயர்வான நிலை எய்தும் என்ற அறக்கோட்பாட்டை வள்ளுவர் முன்வைக்கிறார். திருக்குறளில் அறம் பற்றிய கருத்துக்கள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலிலும் பரந்து விரிந்து காணப்படுகின்றன. காவியத்தில் பாவிகம் எப்படி இழையோடிக் காணப்படுமோ அப்படித் திருக்குறளிலும் அறம் பாவிகமாக இழையோடுவதைப் பார்க்கலாம். அறம் என்றால் என்ன? என்பதை வள்ளுவர் பல குறள்களில் பேசக் காணலாம்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற" (குறள்: 34)

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" (குறள்: 35)

மனதில் எந்த விதமான குற்றமும் இல்லாமல் இருப்பதே அறம் எனப்படும். எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் செயல்களும் தூய்மையானதாக இருக்கும். ஜவர்கலால் நேரு, மகாத்மா காந்தி, அன்னை தெரேசா போன்றோர் திருக்குறள் தத்துவத்திற்கு இலக்கணமாக வாழ்ந்தார்கள். மனதில் பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் என்ற நான்கையும் நீக்கித் தூய எண்ணத்துடன் செயலாற்றுவதுதான் அறம் என்பதை வள்ளுவர் குறிப்பிடுவார். இதனையே மெய்ஞானிகளும், பக்தி இலக்கியங்களும் போதிக்கின்றன. ஆன்மா தனது பயணத்தில் விடுதலை அடைய இதுவே திறவுகோலாகும். எனவே திருக்குறளை மையப்படுத்தி, வள்ளுவர் பேசிய சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளையும், பேண்தகு சமூக உருவாக்கத்தில் அவற்றின் வகிபங்கினையும் ஆராய இக்கட்டுரை முனைகிறது.

**பின்னணி**

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் எந்த நூலை ஆய்வு செய்கின்ற போதும், அந்த நூல் தோற்றம் பெற்ற காலப்பின்னணியில் வைத்து நோக்குவது அவசியம் என்று கூறுவது இவ்விடத்தில் ஞாபகம் வருகிறது. சங்ககாலப் பண்பாட்டு முறைமை புதிய சமூக உருவாக்கத்தை வேண்டி நின்றது. சங்க காலத்தில் குறுநிலத் தலைவர்களுக்கும், வேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற போரில் பலர் இறந்து மடிந்தனர். போரினால் விளை நிலங்கள் பாழாக்கப்பட்டன. நகரங்கள் அழிந்தன. நிலத்தை மீட்டல், பொருளைச் சுரண்டல், அதிகார வெறி போன்ற காரணங்களால் சங்ககாலத்தில் போர்கள் நடைபெற்றன. கட்டுப்பாடில்லாத ஆண், பெண் உறவுமுறை, தாய்வழிச் சமூக முறைமை, அதனால் சொத்துரிமையில் எற்பட்ட மாற்றம், வறுமைநிலை என்னும் பண்பாட்டுக் காரணிகள் புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க அடிப்படையாகின. இதனை மாற்றி வள்ளுவரும் பேண்தகு சமுதாய உருவாக்கத்தை உருவாக்க விளைந்தார். இலக்கியம் என்பது என்றும் மாறாத விழுமியக் கொள்கையை உடையது. மாசுமறுவற்ற இலக்கிய உயர்வு ஒரு சமூகத்தை மேம்படுத்தும். உயர்வான அறநெறிப்பட்ட விழுமியக் கோட்பாட்டினை இலக்கியமாகக் கொண்டதே திருக்குறள்.

**இறைதத்துவம்**

எங்கும் நீக்கமற நிறைந்த முதலும் முடிவுமற்ற சர்வவியாபியான பரம்பொருளையே வள்ளுவர் ஏக இறைவனாக ஏற்றுக் கொள்கிறார். இறைவன் என்பது ஒன்றுதான். அதனை மெய்ஞானிகள் உணர்வர். உலக சமயங்களின் பொதுமறையாகத் திருக்குறள் விளங்குகின்றது. மனித குலம் அனைத்திற்கும் பொது நெறியாகும். அனைத்தும் இறைவனுடையது என்றும், அவனின்றி எங்கும் ஏதும் அசையாது. இறைவனைச் சரணடைவதன் மூலமே அனைத்தையும் அடைய முடியும் என்ற தத்துவத்தை வள்ளுவர் குறளின் வாயிலாகப் போதிக்கிறார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (குறள்: 01)

என்ற இக் குறளில் இறைதத்துவத்தைத் தெளிவு படுத்துகின்றார். உலகில் வழங்கும் எழுத்துக்களுக்கெல்லாம் "அ" என்னும் எழுத்தை (ஒலியை) முதன்மையாகக் கொண்டு இயங்குவதுபோன்று, உலகின் அனைத்து இயக்கங்களையும் பரம்பொருளின் அம்சமான சூரியன் தலைமை ஏற்று வழிநடத்திச் செல்கின்றான் என்று சூரியனை வாழ்த்திப் பாடுகின்றார். இந்த உயர்வான கருத்தை எந்தச் சமயமும் ஏற்றுக்கொள்ளும். இதனாலேயேதான் திருக்குறள் பொதுமறை என்று போற்றப்படுகின்றது. இன்றைய அறிவியல் உலகமும் இதனை ஏற்றக்கொள்ளும். பிரபஞ்ச ஈர்ப்புசக்தி என்பது ஒரு சக்தியை அல்லது குறியீட்டைக் கடவுளாக ஏற்றுக்கொள்கின்றது. பிரபஞ்சத்துடன் நாம் கதைக்க முடியும். அந்தச் சக்தி எமது கூற்றுக்களை நடைமுறைப்படுத்துவதை கண்கூடாகப் பார்க்கிறோம்.

கடவுள் ஒன்று என்ற உயர்ந்த கொள்கையை ஏற்றுக்கொண்டால் சமூகத்தில் சமயப் போட்டி போன்றவற்றை அகற்றி மேல்நிலை அடையலாம். மதங்களும் மதவாதிகளும் பிரிவினையை உண்டாக்கி மோதல்களை உண்டாக்குகின்றனர். ஞானக் கல்வியால்தான் மெய் உணர்வினைப் பெறலாம். ஏக தத்துவத்தை உணர்ந்தால்தான் பூசல் அற்ற உயர்ந்த சமூகத்தை உருவாக்கலாம். இதனை வேத வாக்கான திருக்குறளும், பக்தி இலக்கியங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (குறள்: 350)

இக்குறளில் உலகப் பற்றுக்களை விடுவதற்கு இறைவனுடைய திருவடிகளை இறுகப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்கிறார். ஆன்ம விடுதலையை இக்குறளில் காண்கிறோம். தனது தெளிந்த கருத்துக்களை விளக்கி மனித சிந்தனையை உண்மை வழிக்குத் திருப்பி விட்டிருக்கின்றார்.

திருக்குறள் இனம், மதம், நாடு, காலம் கடந்தது. அதனால் அது பொதுமறை எனப்படுகிறது. ஒவ்வொரு மதத்தினரும் தத்தமது சமயத்தையே திருக்குறள் பேசுவதாகக் கொள்வர். இந்து சமயத்தவர் தமது நூலாகக் கொள்வர்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீத்தார்
இறைவன் அடிசேரா தார்" (குறள்: 10)

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்" (குறள்: 03)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இன்றைய நூற்றாண்டின் புதிய சமூக உருவாக்கத்திற்கும் வழிகாட்டும் புரட்சி நூல். திருக்குறளின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைக் கடந்து பேண்தகு சமூகத்தை உருவாக்குவதற்குத் துணை செய்கின்றது.

**இல்லற வாழ்வு**

இல்லறத்தாரது பண்புகளையும், கடமைகளையும் திருக்குறள் போதிக்கின்றது. தூய அன்புடைய ஆணும், பெண்ணும் கருத்தொருமித்துச் சேர்ந்து வாழும் அற வாழ்க்கையே இல்லறம் எனப்படும். அறநெறி நின்று வாழ்க்கையை வாழ்பவன் தந்தை, தாய், குரு மூவருக்கும் சிறந்த துணையாகிறான். மேலும், பற்றற்ற துறவிகளுக்கும், உணவற்ற வறியவர்க்கும், மறைந்த முன்னோர்களுக்கும், தெய்வம், சுற்றம், விருந்தினர், தன் குடும்பம் ஆகியவர்களுக்கு இல்வாழ்வான் சிறந்த துணையாகின்றான். தாய், தந்தையர், முன்னோர்களின் வழிபாடு முக்கியமானது. தாய், தந்தையர் உயிருடன் உள்ளபோது ஒவ்வொரு நாளும் அவர்களது காலில் விழுந்து வணங்க வேண்டும். அவர்கள் அருகில் இல்லாத பொழுது மானசீகமாக வணங்க வேண்டும். இறந்த முன்னோர்களுக்கு உரிய கடமையை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இறந்த முன்னோர் பலர், மோட்சம் அடையாமல் இருப்பதால் பல குடும்பங்களுக்குப் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. முன்னோர்கள் மாளையபட்சத்தில் பிதிர்க்கடன் செய்வதைப் பார்க்கிறோம். இறந்த முன்னோர் மகிழ்வடைந்து குடும்ப சந்ததிக்கு ஆசிர்வாதம் பண்ணுவர். வாழ்க்கையில் தடைப்பட்ட கல்வி, தொழில் என்பனவற்றில் உடனடியாக முன்னேற்றம் ஏற்படும். இதனாலேதான் வள்ளுவர் தென்புலத்தார் வழிபாட்டினைக் குறளின் முன்பாக வலியுறுத்துகின்றார். சமண சமயத்தவர் துறவு வாழ்க்கை மேலானது என்று கூறும் காலகட்டத்தில் வள்ளுவர், முற்போக்கான சிந்தனையில் நின்று அறநெறியுடைய இல்வாழ்க்கை உயர்ந்தது எனக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும். துறவு பற்றித் தனி அதிகாரத்திலும், நீத்தார் பெருமையிலும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இல்லற வாழ்வில் ஆண், பெண் என்ற வேறுபாட்டினை வள்ளுவர் பேசவில்லை. அவர்கள் செயற்பட வேண்டிய ஒழுங்கு முறையியலைப் பேசினார் என்றே கொள்ள வேண்டும். வரலாற்றில் பெண்மை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆன்மீகத்துறையில் ஞானம் அடைவதற்குப் பெண் தகுதியற்றவள் என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் வள்ளுவர் பெண்மையை ஒதுக்கவில்லை. சமத்துவத்தினையே பேணினார் எனலாம்.

**கல்வி**

திருக்குறள், கல்வி கற்பதனால் ஏற்படும் பயனையும், கற்காததனால் ஏற்படும் பயனின்மையையும் அறிவியல் நோக்குடன் பகிர்ந்து கொள்கிறார். தாம் கற்றறிந்த சிறந்த நூல்களின் பயனால் தாம் இன்புறுவதோடு, தாம் கற்ற கல்வியைக் கற்பித்தலால் உலக மக்களும் இன்புறுவது கண்டு மகிழ்வர். கற்றறிந்த சான்றோர் கல்வியின் வளர்ச்சியினால் சமூகத்தை மேல்நிலையடையச் செய்யலாம். சமயக் கல்வி மக்களை மேன்மையடையச் செய்யும். கூடா நட்பு, அடக்கமின்மை, ஒழுக்கமின்மையை வள்ளுவரும் பல இடங்களில் கண்டித்துப் பேசுகின்றார். ஆரோக்கியமான சமூகம் உருவாக இவை தடையாக

இருக்கின்றன. கள்ளுண்ணல், கொலை, சூது பற்றியும், அவற்றால் வரும் கேடு பற்றியும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவற்றால் சமூகத்தில் பல வன்முறைகள் ஏற்படுகின்றன. போதைப்பொருள் தடுப்புப் பற்றி பலர் பலவாறு பேசுவதைப் பார்க்கிறோம். கல்வியினாலும், சமயக் கல்வியினாலுமே ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கலாம். இறைக்கல்வி எல்லோருக்கும் ஊட்டப்படுகின்றது. தியானக் கல்வியினாலும், யோகப் பயிற்சியினாலும் பலர் மகிழ்ச்சியாகவும், ஆனந்தமாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். இதற்குக் கல்வியே காரணமாகும். வள்ளுவர் ஆன்மா விடுதலை அடையும் பயணத்தையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதைத் திருக்குறளில் காணலாம்.

கல்வி என்பது மிகவும் ஆற்றல் வாய்ந்த கருவி. உலகை மாற்றுவதற்கு அதைப் பயன்படுத்த முடியும். கல்வியினால்தான் உயர்ந்த இலட்சியத்தை அடையலாம். உயர்ந்த சமூதாயத்தை உருவாக்க கல்வி உதவுகின்றது. சமய உண்மைகளைப் போதிக்க கல்வி உதவுகின்றது. அறிவு நமக்கு ஆற்றலை அளிக்கின்றது. அன்பு நம்மை முழுமை அடையச் செய்கிறது. ஒரு மாணவனுக்கு உண்மையான பாடப்புத்தகம் அவனுடைய ஆசிரியர்தான். ஆசிரியர்களுடைய வழிகாட்டல், அவர்களுடைய ஆளுமைப் போதனைமுறைகள், மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமைகின்றன.

**பெரியாரைப் பிழையாமை**

"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்" (குறள்: 894)

பெரியவர்களுக்கு நாம் துன்பம் செய்ய முற்படுவது, நமது அழிவை விரைவுபடுத்தி விடும். வலிமை உள்ளவர்களுக்குத் துன்பம் இழைத்தால் அது உயிரைக் கொண்டுபோகும் எமனைத் தானே கைதட்டி அழைப்பது போன்றதாகும் என உலகத்துக்கு எச்சரிக்கை செய்கிறார். சிறியவர்கள் பெரியவர்களுக்குத் தீங்கு செய்யும்போது, சிறியவர்கள் அழிவது உறுதி. காட்டுத்தீயிலிருந்து ஒருவன் தப்பி உயிர் பிழைத்தாலும் ஆற்றலால் உயர்ந்து நிற்கும் பெரியவர்களின் சினத்திலிருந்து ஒருவர் தப்ப முடியாது. அழிவது உறுதி என்பதை வள்ளுவர் பல குறள்களின் ஊடாக பகிர்ந்தளித்துள்ளார். பிறருக்குத் துன்பம் விளைவித்தால் அது பல மடங்கான துன்பத்தை விளைவித்தவர்களுக்கு ஏற்படுத்தும் என்ற உயரிய கருத்துக்களை இதன்மூலம் வள்ளுவர் முன்வைக்கிறார்.

**அரசு**

வள்ளுவரால் சொல்லப்பட்ட அரசியல் அறநெறிகள், அக்காலத்தைக் கருதிச் சொல்லப்பட்டாலும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாய் அமைந்துள்ளன. எந்த நாட்டு அரசியல் அணுகுமுறைகளுக்கும் எடுத்துக் காட்டாய் விளங்குகின்றன. எந்த நாட்டு அரசும் செயற்பட வேண்டிய முறைகளின் நுட்பங்களை எடுத்தியம்புகின்றன. படை, குடி, கூழ், நட்பு, அமைச்சு, அரண் ஆகிய உறுப்புக்களை உடையதாகத் திருக்குறள் அரசியலை விபரிக்கின்றது. நாட்டை ஆளும் அரசு எப்படி இயங்க வேண்டும்?, எவ்வாறு செலுத்தப்பட வேண்டும், என்பதை வள்ளுவர் தெளிவாகவே பேசுகின்றார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (குறள்: 385)

என்பதில் வல்லமையான அரசின் செயற்பாடுகளைப் பதிவு செய்வதைப் பார்க்கிறோம். இத்தகைய அரசின் கீழ் வாழும் குடிமக்கள், அச்சமும் கவலையுமின்றி இனிது வாழ்வர். அதனால் அவர்களுடைய வாழ்வாதாரம் சிறக்கும் என்கிறார்.

நாட்டை ஆள்வோர், தன்னலத்தைப் பெரிதாகக் கொண்டு நாட்டு வளங்களைச் செழிக்கச் செய்யாமல், கிடைத்த பொருளை வீணாகச் செலவிட்டு அனைத்தையும் செலவிட்ட பின்பு அரசை நடத்த மீண்டும் மக்களிடமே பொருள் வேண்டி நிற்கும் நிலையை வன்மையாக வள்ளுவர் கண்டிக்கிறார். செங்கோல் ஏந்திய மன்னன் மக்களிடத்தில் பொருள் வேண்டுதல் என்பது வழிப்பறி செய்பவன் வேல்கொண்டு வழிப்போக்கரிடம் பொருள் பறிப்பது போன்றது என்கிறார்.

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" (குறள்: 552)

இங்கு இரவு என்பது மக்களிடம் மன்னன் வேண்டி நிற்பதைக் குறிக்கிறது. நாட்டையாளும் மன்னன் கற்றறிந்து செங்கோலாட்சி புரிந்து, பகிர்ந்துண்டு, தக்க நெறியில் பொருள் சேர்த்து, சீரிய திட்டங்கள் வகுத்து, நல்லியல்புடைய அமைச்சரவை யோடு கூடியிருந்து தம் ஆட்சித்திறத்தால் பொருள் வழங்கி, நல்லாட்சி தருபவனாக இருத்தலே நலமுடையதாகும். இத்தகைய நெறிமுறைகளை உணர்ந்து ஆட்சி செய்பவரை மக்கள் நல்லாட்சியாளன் எனக் கருதி, இறைவனுக்கு இணையாக வைத்துப் போற்றுவார்கள் என்கிறார் வள்ளுவர்.

**பொருளாதாரம்**

வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. பொருள் உடையவரே அறத்தைச் செய்யும் இன்பத்தைத் துய்க்க முடியும் என்கிறார் வள்ளுவர்.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு" (குறள்: 752)

என்பது உலக நடைமுறையை உணர்ந்து கூறும் குறளாகும். பொருளை அறவழியில் தேடி நற்செயல்களுக்காகச் செலவிடவேண்டுமென்பது நோக்கமாகும். பழியஞ்சிப் பிறரோடு பகுத்துண்டு, ஒப்புரவும் ஈகையும் கொண்டு, பண்போடு வாழ்வோர் சான்றாண்மை உடையவர்கள். பொருள் தேடும் உரிமை, அதனைப் பாதுகாக்கும் உரிமை சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் உண்டு என்கிறார். அப்படிப் பொருள் தேடுவது அற வழியில் அமைய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார்.

"அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை" (குறள்: 659)

என்று அதன் மகத்துவத்தைச் சொல்கிறார். பிறர் வருந்தும்படி ஒருவன் அடைந்த பொருளனைத்தும் அவன் வருந்தி அழும்படி, அவனை விட்டுப் போய்விடும். நல்ல வழியில் வந்த பொருள் தொலைந்தாலும் பின்னர் நன்மையே தரும்.

சமுதாயத்தில் பலர் போட்டி, பொறாமையினால் மற்றவர்களுக்குக் கெடுதல் செய்கின்றனர். எவ்வளவோ நல்ல செயல்கள் செய்வதில் தம் நேரத்தை செலவிடுவதைத் தவிர்த்துப் பிறருக்குத் தீமை செய்வதிலேயே நமது சிந்தனைகளையும், செயற்திறன் களையும் கழிக்கின்றனர்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" (குறள்: 314)

பிறரைப் பழிவாங்கும் உரிமை மனிதர்களுக்கு உரியது அன்று. அவர்களுக்கு நன்மை செய்வதே உயர்ந்த பண்பாகும். ஊழ் என்பதே அவரவர்களுக்கு உரிய பலனைக் கொடுக்கும். பிறருக்கு நன்மை செய்தல் செய்தவருக்கப் பல மடங்கு நன்மையை உண்டாக்கும். பிறருக்குத் தீமை செய்தால் செய்தவர் பல மடங்கு தீமையை அனுபவிக்க வேண்டும். இது கர்மக்கோட்பாடு. கர்மக்கோட்பாட்டிலிருந்து எவரும் தப்ப முடியாது.

**விருந்தோம்பல்**

விருந்து என்பதற்கு புதுமை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. புதியவராக ஒருவர் நமது இல்லத்திற்கு வரும் பொழுது அவரை விரும்பி மகிழ்ச்சியோடு உபசரிக்க வேண்டும். விருந்தினர் உள்ளம் நோகும்படி செய்தல் கூடாது.

"செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்தவர்க்கு" (குறள். 86)

தன் இல்லத்திற்கு வந்த விருந்தினரை உபசரித்து மனமகிழ்வோடு வழியனுப்பிய பின்னர் மீண்டும் விருந்தினர் வரமாட்டாரா என்று எதிர்பார்த்துக் காத்திருப்பவன் மேலுலகத்திலுள்ள தேவர்களுக்கு நல் விருந்தினன் ஆவான். செல்வம் இருந்தும் வறுமையாவது விருந்தினர்களை உபசரிக்காத பேதமைச் செயலாகும். அகமும் முகமும் மலர்ந்து வரும் விருந்தினர்களை நன்றாக உபசரிப்பவர்களின் வாழ்விலே செல்வம் குறையாது.

எப்பொழுதும் திருமகள் மலர்ச்சியுடன் இருப்பாள் என்பதைத் திருக்குறள் குறிப்பிடுகின்றது. பெரிய புராணத்தில் பல அடியார்கள் விருந்தினரை உபசரிப்பதையே தொண்டாகப் போற்றி வந்தனர். அவர்கள் வாழ்வில் அற்புதங்கள் நிறைந்ததைப் பெரிய புராணம் காட்டுகின்றது. விருந்தினர்களை வீட்டின் வெளியே இருத்தி விட்டு தான் மட்டும் தனித்து உண்பது விரும்பத்தகாதது எனத் திருக்குறள் தனிமனிதனுக்கும் இல்லறத்தானுக்கும் அறத்தைப் போதிக்கின்றது. வாழ்வியலின் நோக்கமே விருந்துண்டு வாழ்வதே என்பதைத் திருக்குறள் பேசுகின்றது.

**செய்ந் நன்றி அறிதல்.**

ஒருவன் செய்ந் நன்றியை ஏழு பிறப்பிலும் மறவாமை வேண்டும்.

"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு" (குறள் 110)

நன்மை செய்தவர்களை நாளும் நினைக்க வேண்டும். தந்தை, தாய், குரு, இறைவன், உறவினர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அன்று அன்று நன்றி சொல்ல வேண்டும். அப்பொழுதே அறக் கடவுள் உதவி புரிவார். பிறர் நமக்குச் செய்த நன்மையைப் போல நாமும் பிறர்க்கு நன்மை செய்ய வேண்டும். இந்த எண்ணம் உருவாக வேண்டும். செய்ந்நன்றியின் மறவாமையின் பலனாகும். செய்ந்நன்றி மறவாத பண்பு ஒவ்வொருவரிடமும் இருந்தால் சாதி, மத வேறுபாடிற்கு இடமில்லை. வாழ்வில் பேதம் உண்டாகாது.

முன்பு நமக்கு நன்மை செய்தவர் பின்பு நம்மைக் கொல்வதைப் போன்ற

தீமையைச் செய்தாராயினும் அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலே அவர் செய்த தீமை மறந்து போகும் என வள்ளுவர் திருக்குறளில் குறிப்பிடுகின்றார்.

திருவள்ளுவர் பற்றி மகாரிஷி கூறும் கருத்துக்களை நோக்கலாம். ஞானநெறி காட்டிய பெரியார்களுள் சிறந்த ஒரு பேரறிஞர் திருவள்ளுவர். அவர் படைப்பு என்ற கற்பனையிலிருந்து விடுபட்டுப் பரிணாமம் என்ற உண்மை வழியிலே முழுமை பெற்ற மெய்ஞானி ஆவார். தனது தெளிந்த கருத்துக்களை விளக்கி மனித சிந்தனையை உண்மை வழிக்குத் திருப்பிவிட்டிருக்கிறார். புலன் கவர்ச்சி மயக்கத்திலிருந்து தெளிந்து ஆன்ம உணர்வால் வழிப்புநிலை பெற வழிகாட்டியுள்ளார் (திருக்குறள் உட்பொருள் விளக்கம். ப. 10) என்று கூறியமை இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

**முடிவுரை**

அறம், பொருள், இன்பம் மூன்றையும் உடையதே வாழ்வியல். அந்த வாழ்வியலை இயக்கும் சக்தியாக வள்ளுவம் அறத்தைப் பேசுகிறது. இதனாலேயே குடும்பம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம் எனப் பல்வேறுபட்ட வாழ்வியல்சார் நல்லறங்களைப் போதித்து, பேண்தகுசமூகத்தை உருவாக்க முனைந்துள்ளது. சமத்துவமான இறை தத்துவத்தையும் பேசுகிறது. கல்வியால் சமூகத்தை மாற்றலாம் என்கிறது. நீதியான பொருளாதார முறைமையையும் வள்ளுவம் கட்டமைக்கிறது. அறமற்ற வழியில் பொருள் சேர்த்தல் தவறு என்று மக்களுக்கு உணர்த்தி, சரியான முறையில் பொருளீட்டும் முறைமையை வலியுறுத்தி, சுரண்டலற்ற சமுதாயம் பிறக்க வழிவகை செய்கிறது. வள்ளுவம் பேசிய அரசியல்நெறிகள், அக்காலத் தேவை கருதிச் சொல்லப்பட்டாலும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாய், எந்நாட்டு அரசியல் அணுகுமுறைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. உலகில் மனிதநேயச் சிந்தனை வளர்ச்சிநிலையின் அவசியம் கருதிய வள்ளுவர், அதுசார்ந்த கருத்துக்களை முன்வைப்பதும் பேண்தகு சமூக அபிவிருத்தி நோக்கிய பார்வையிலேயே ஆகும். சினத்தைத் தவிர்த்து, நன்னயம் ஓம்பி, அழுக்காற்றை - அவாவினை அகற்றி, அன்பின் உயர்நிலையினை ஏற்று, மனதிலே ஏற்படும் மாசுகளைத் நீக்கி, மனிதர்கள் வாழ்ந்தால் அந்த வாழ்வு, சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிசமைக்கும் என்று வள்ளுவம் போதிக்கிறது. எனவே வள்ளுவத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுத்திட்டத்தின்வழி, சமுதாயம் மேம்பாடு அடைவதற்கான வழிமுறைகளையும், அணுகுமுறைகளையும், சமுதாயம் முன்னேற்றம் அடையத் தடையாக இருப்பவற்றையும், பேண்தகு சமூக அபிவிருத்திக்கான செயற்பாடுகளையும் கண்டறிந்து தீர்வுகாணவேண்டியது இன்றைய சமூகத்தின் கட்டாய தேவையாகும்.

**உசாத்துணைகள்**


1. இராமசாமி.செ.ரெ., (1951). திருக்குறள் பொருள் விளக்கம். திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
2. குழந்தைசாமி.வா.செ., (1987). வாழும் வள்ளுவம். பாரதி பதிப்பகம், சென்னை.
3. சுந்தரசண்முகனார், (1963). வள்ளுவர் இல்லம். புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி.
4. தண்டபாணிப்பிள்ளை.நாகை.சொ., (1933). திருக்குறள் அறத்துப்பால். திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
5. திரு.வி.க., (1950). திருக்குறள் மூலம் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன். பொதிகை பதிப்பகம், கடலூர்.
6. திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை), (2020). பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.
7. பாலசுப்பிரமணியம். (2014). குறளின் கண்கள். ஆய்வுக்கோவை இலக்கியம். இந்தியப்பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சிராப்பள்ளி.